பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 26 வெள்ளிக்கிழமை 09.05.2025 கதிர் 181

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளில் ஒருவழியாகதேசியமக்கள்சக்தியைத் தோற்கடித்ததல்ல பெரிய சவால், தமிழ்க் கட்சிகள் சேர்ந்து சபைகளில் ஆட்சியை அமைப்பதுதான் ☞ 2

### உள்ளூராட்சி சபைகளில்

# ஆட்சியமைக்க தமிழ்க் கட்சிகள் எந்த அழைப்பும் விடுக்கவில்லை

### ஆளும்தரப்பு அறிவிப்பு

வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளில் ஆட்சிஅமைப்பதுகுறித்துதமிழ்கட்சிகளிடமிருந்து எந்தவிதமான உத்தியோகபூர்வமாக அறிவிப்புக்களும் ஆளும்தரப்புக்குக் கிடைக்கவில்லை. தமிழ் கட்சிகள் எம்முடன் பேச்சுநடத்தினால்ஆழமாகஆராய்ந்தபின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படுமென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும். இந்த மூன்று தேர்தல்களிலும் மக்களின் நடத்தை வேறுபட்டதாகவே காணப்படும். அந்தந்தத் தேர்தல்களுடனேயே ஒப்பீடுகள்மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு பொதுத் தேர்தலுடன் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒப்பிட்டுப் பார்ப்பதாயின் கடந்த தேர்தலில் 32 சதவீத வாக்குகளைப் பெற்றுக் கொண்ட சஜித் பிரேமதாச இம்முறை 21சதவீத வாக்குகளையே பெற்றிருக்கின்றார்.

சஜித்பிரேமதாசதோல்வியடைந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்டவாக்குகளைஇந்ததேர்தலில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது போயுள்ளது. அவ்வாறெனில் அவர் பெரும் பின்னடைவை சந்தித்திருக்கின்றார் என மதிப்பிட முடியுமல்லவா? வரலாற்றில் தனியொரு கட்சி அதிகளவான சபைகளைக் கைப்பற்றியிருக்கிறது. 266 சபைகளை ஆளும்தரப்பு கைப்பற்றியிருக்கிறது. வரலாற்றில் எந்தவொரு கட்சியும் இவ்வாறான வெற்றியைப் பெற்றிருக்கவில்லை.

இவைதவிரமேலும்பலசபைகளை அமைப்பதற்கான வாய்ப்பும் ☞ 2

## மின் கட்டணம் எவ்வளவு அதிகரிக்கப் போகின்றது?

### சஜித் நேற்று நாடாளுமன்றில் கேள்வி

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய மின்சார கட்டணத்தை எந்தளவு அதிகரிப்பதற்கு தீர்மானித்திருக்கிறது என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார். ☞ 2

## 1 பில்லியன் டொலர் சலுகைக் கடனுதவி

### உலக வங்கி வழங்குகின்றது

இலங்கையின் தனியார்துறை மேம்பாட்டுக்காகவும், வேலைவாய்ப்பு உருவாக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவும் 3 வருடகாலத்துக்கு ஒரு பில்லியன் டொலர் சலுகைக் கடனுதவியை வழங்குவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

உலக வங்கிக் குழுமத்தின் தலைவர் அஜய் பங்காவின் இலங்கைப் பயணத்தின்போது அவருக்கும் ☞ 2

### இந்து சமுத்திரத்தில்

## பூகோள மோதல்களில் இலங்கை தலையிடாது

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

ஆளும்தரப்பு ஆரம்பத்திலிருந்து பின்பற்றும் நிலைப்பாட்டுக்கமைய இந்து சமுத்திரத்தில் பூகோள மோதல்களில் நாம் தலையிடப் போவதில்லை. எனவே எமது இறையான்மையைப் பாதுகாத்துக் கொண்டு நாம் அணிசேராக் கொள்கைக்கமைய செயற்படுவோமென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதேநேரம் பிராந்தியத்தினதும் மக்களினதும் பாதுகாப்பையும்பிராந்தியத்தின்அமைதியையும் உறுதிப்படுத்துவதற்காக பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஒத்துழைப்பு வழங்க இலங்கை தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள்சந்திப்புநேற்றுவியாழக்கிழமை இடம்பெற்றது. அங்கு இதனைத் தெரிவித்தார் அவர். மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா - பாக்கிஸ்தானுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதல் தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு உன்னிப்பாக அவதானித்து ஆளும்தரப்புக்குத் தகவல்களை வழங்கி வருகிறது. ☞ 2

## தேர்தலில் கசிப்பும் பணமும் கொடுத்ததை

# “நிரூபியுங்கள்”

### அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு தமிழ் அரசின் செயலர் சவால்



‘கசிப்பும்பணமும்கொடுத்துதமிழ்அரசுக் கட்சிவாக்குசேகரித்ததுஎன்பதைஅமைச்சர் விமல்ரட்நாயக்கநாடாளுமன்றுக்குவெளி யில் வந்து ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டவேண்டும்‘ என்று சவால் விடுத்தார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

”சலுகைகளுக்காக வாக்களிப்பவர்கள் தமிழ் மக்கள் என்று இதுவரை காலமும் பிழையான எண்ணத்தைக்கொண்டுள்ளார் அமைச்சர்” என்றும் அவர் சாடியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசிய அமைச்சர் விமல்ரட்நாயக்க, ”இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கசிப்பும் பணமும் ☞ 2

### வடக்கு கிழக்கில் 6 ஆயிரம் ஏக்கர்

## காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானியின் நோக்கம் என்ன?

### கேள்விக்கு பதிலளிக்க ஒரு வாரம் அவகாசம் வாங்கிய ஆளும்தரப்பு

வடக்கு-கிழக்குமாகாணங்களில்தமிழர்களின் பூர்வீககாணிகளைசுவீகரிப்பதற்காக அரசினால் 2025 .03.28 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பின் உள்நோக்கம் என்னவென்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிப்பதற்கு ஆளும்தரப்பு ஒரு வாரம் காலவகாசம் கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் 27/2இன் கீழ் முன்வைத்த விசேட கூற்றுக்குப் பதிலளிக்கையிலேயே சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க இந்த கால அவகாசத்தைக் கோரினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கில்வாழ்கின்றதமிழ்மக்களின் காணிகள் பலவற்றில் இப்போதும் இராணுவ முகாம்கள் உள்ளன. இராணுவ வசமே பெரும்பாலான காணிகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பகுதிகளில் மக்கள்இப்போதும்அகதிகளாகத் தனியார் வீடுகளிலும்

## வெளிநாடுகளுக்கு செல்ல 2 வருடங்களில் ஒரு பில்லியன் ரூபா செலவிட்டார் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 முதல் 2024 வரையான காலப் பகுதியில் 23 வெளிநாட்டுப் பயணங்களைமேற்கொண்டுள்ள நிலையில் அதற்காக ஒரு பில்லியன் ரூபா வரையிலான அரச நிதி செலவிடப்பட்டுள்ளது என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வில்வாய்மூலவிடைக்கான வினாக்கள் வேளையின்போது ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்லக்மாலிஹேமசந்திர முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ஆம் ஆண்டு 4, 2023ஆம் ஆண்டு 14, 2024 ஆம் ஆண்டு 5 என்ற அடிப்படையில் 2 ஆண்டு காலத்துக்குள் 23 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

அவரது இந்த அரசமுறைப் பயணத்தில் அவருடன்வேறுபலரும்இணைந்திருந்தனர்.ர். 2022ஆம் ஆண்டு 63 பேர், 2023 ஆம் ஆண்டு 252 பேர், 2024 ஆம் ஆண்டு 111 பேர் என்ற அடிப்படையில் இக்காலப்பகுதியில் மாத்திரம் ரணில் விக்கிரமசிங்கவுடன் அரச செலவில் 436 பேர் வெளிநாட்டுப் பயணங்களில் பங்கேற்றுள்ளனர்.

முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க 2022ஆம்ஆண்டு மேற்கொண்டஅரசமுறை பயணத்துக்கு 129 மில்லியன் ரூபா, 2023 ஆம் ஆண்டு 577 மில்லியன் ரூபா, 2024 ஆம் ஆண்டு 300 மில்லியன் ரூபா ☞ 8

## பொருளாதார வளர்ச்சியை 3 % என குறிப்பிடுவதற்கு வெட்கமில்லையா?

### ஆளும்தரப்பை வாட்டியெடுத்த ஹர்ஷ எம்.பி.

பொருளாதாரவளர்ச்சியை 3 முதல் 3.1 சதவீதத்துக்கு வரையறுப்பதாக குறிப்பிடுவதற்கு ஆளும்தரப்பின் 159 உறுப்பினர்களுக்கும் வெட்கமில்லையா? இதற்கு ஆளும்தரப்பு பதிலளிக்க வேண்டுமெனஐக்கியமக்கள் சக்தியின் கொழும்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்தார்.

பொருளாதாரப்பலப்படுத் தலுக்கான பெருமையை கடந்த ஆளும்தரப்புக்கு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பெரும் சவால். வெளிப்படைக்கு இன நலன் என்றெல்லாம் பேசும், மேடைகளில் முழுங்கும் கட்சிகளும் தலைவர்களும் இதுபோன்ற தருணங்களில் தங்கள் கட்சி மற்றும் சொந்த நலன்களுக்குத்தான் முன்னுரிமையளிக்கிறார்கள். அதன் காட்சிகள் விரியத் தொடங்கியுள்ளன. இனிவரும் நாட்களில் அது பற்றிய சுவராஸியமான விடயங்கள் தொடர்ந்து வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.

உள்ளூராட்சி சபைகளில் எப்படி ஆட்சி அமைப்பது என்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு சனிக்கிழமை வவுனியாவில் கூடி ஆராயவுள்ளதாகத் தெரிகிறது. தேர்தலுக்கு முன்னர் சபைகளின் தலைவர்கள் யார் என்பது தொடர்பில் எந்த முடிவுகளையும் கட்சி அறிவித்திருக்கவில்லை. தேர்தலின் பின்னர், பெரும்பாலான சபைகளில் கட்சி தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதால், உடனடியாக இந்த விடயத்தைத் தீர்மானிப்பதும் தற்போது பெரும் சிக்கலாகியுள்ளது. ஒவ்வொரு சபைகளிலும் ஆட்சி அமைக்க தமிழ் அரசுக் கட்சிக்கு உதவும் தரப்புக்களைப் பொறுத்தே இந்த விடயத்தை இறுதி செய்யவேண்டியிருக்கும் என்பதே நிலை.

எது எப்படியிருந்தாலும் தமக்கு அதிகளவு ஆசனங்கள் உள்ள சபைகள் எல்லாவற்றிலும் ஆட்சியமைக்கும் உரிமையை தமிழ் அரசுக் கட்சி நிலைநாட்ட முயலும் என்றே தெரிகிறது. அதாவது தனியொரு கட்சியாக அதிக ஆசனங்களைக் கொண்ட சபைகளில் தலைவர், மாநகர முதல்வர் தெரிவுக்கான பெயர்களை முதலாவது சபை அமர்வில் தமிழ் அரசுக் கட்சி முன்வைக்கும். தமிழ்த் தேசியம், ஒற்றுமை பற்றிப் பேசும் மற்றைய கட்சிகள் அதற்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதை அது எதிர்பார்க்கும். அதேபோன்று வேறு சபைகளில் தனித்து அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கும் தமிழ்க் கட்சி தமது உறுப்பினரை தலைவர் பதவிக்கு அல்லது நகர பிதா பதவிக்கு ஒருவரை முன்மொழிந்தால் அவருக்குத் தமிழ் அரசு ஆதரவளிக்கும்.

இது 2018 உள்ளாட்சித் தேர்தலின்போதும் தமிழ் அரசுக் கட்சியின் அணுகுமுறையாக இருந்த விடயம்தான். ஆனால், யாழ். மாநகர சபையில் இந்த அணுகுமுறைக்கு ஒத்துழைக்காமல் தமிழ்க் காங்கிரஸ் குழப்பப்போக, அது அதிக ஆசனங்களை வைத்திருந்த வேறு சில சபைகளையும் தானே கைப்பற்றிக்கொண்டு ஆட்சியமைத்தது தமிழ் அரசுக் கட்சி. இந்தத் தடவையும் அதுபோன்றதொரு நிலமையே வரும் என்று எனக்குப்படுகின்றது. நான் தொடக்கத்திலேயே சொன்னது போல என்னதான் மேடைக்கு மேடை தமிழ்த் தேசியம், ஒற்றுமை என்று பேசினாலும் தமது கட்சி அரசியலை முதன்மைப்படுத்துவதிலேயே கட்சிகள் முன்னிலை வகிக்கும் என்பதால் யாழ்ப்பாண மாநகர சபையில் தனிப் பெரும் கட்சியாக 13 ஆசனங்களைக் கொண்ட தமிழ் அரசுக் கட்சி இலகுவாக ஆட்சியைப் பிடிக்க மற்றைய தமிழ்க் கட்சிகள் ஒத்துழைக்கப்போவதில்லை. இப்போதிருந்தே அதற்கான காய்நகர்த்தல்கள் தொடங்கிவிட்டன.

தமிழ் அரசின் ஆதரவுடன் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரை யாழ். மாநகர சபை முதல்வராக்குவதில் புலம்பெயர் அரசியல் சக்திகள் அதிகம் ஆர்வமாக இருப்பதன் காரணமாக, ஏனைய சபைகளிலும் குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

இந்த இடத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத்தான் இப்போது மவுசு. ஏனெனில் அது யாரோடு- அணி சேர்கிறதோ அவர்கள் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவார்கள். சில சபைகளில் தமிழ் அரசுடன் ஜனநாயகக் கூட்டணி சேர்ந்தால் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை கிடைக்கும். அதேபோன்று சில சபைகளில் தமிழ் காங்கிரஸுடன் சேர்ந்த ஆட்சியமைக்க முடியும், அல்லது ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும். இந்த நிலமையை நன்கு புரிந்துகொண்டுள்ள ஜனநாயகக் கூட்டணி இப்போதே மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டத் தொடங்கிவிட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமையுடன் பேசிய புளொட், ரெலோ கட்சிகளின் தலைவர்கள் சேர்ந்த ஆட்சியமைப்பது குறித்துப் பார்க்கலாம், பேசலாம், சிந்திக்கலாம் என்று கூறியிருக்கும் அதேநேரம் கஜேந்திரகுமாருடனும் இரகசியமாகப் பேச்சு நடத்தி வருகின்றனர். கஜேந்திரகுமாரோ தேர்தலின்போது என்பிபி வேறு தமிழ் அரசுக் கட்சி வேறு இல்லை, அதனால் தமிழ் அரசுக் கட்சியைத் தோற்கடிக்கவேண்டும் என்றவர். எனவே தமிழ் அரசுடன் சேர்ந்த ஆட்சியமைத்தால் 'நெட்டிசன்கள்' அவரைக் கிழித்துத் தொங்கவிட்டுவிடுவார்கள் என்பதால் தமிழ் அரசு பற்றி இப்போது அடக்கி வாசிக்கவேண்டியவராக இருக்கிறார். அதுபோன்றே ரெலோவையும் அவரும் அவரது கட்சியினரும் சகட்டுமேனிக்கு விமர்சித்தனர், எனினும் ஆட்சியமைக்கும்போது ரெலோவின் துரோகங்களும், கழிவு அரசியலும் அவருக்கு மறந்து போய்விடும் என்று நம்புவோமாக!

இப்படிப்பட்ட பின்னணியில் தமிழ் அரசுக் கட்சி மற்றைய தமிழ்க் கட்சிகளின் பின்னால் சென்று கெஞ்சிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, தான் முன்னிலை பெற்றுள்ள சபைகளில் எல்லாம் தலைமைப் பதவியைப் பிடிப்பதற்கான முன்மொழிவை வைக்கும். தேசியம், ஒற்றுமை பற்றிப் பேசுபவர்கள் அதனை ஆதரிக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு அந்த முன்மொழிவு வைக்கப்படும். மற்றைய கட்சிகள் அதற்கு ஆதரவாக இருந்தால் சபைகளை தமிழ் அரசு கைப்பற்றும். அதற்கு மாறாக, வேறு நிலைப்பாடுகளை மற்றைய தமிழ்க் கட்சிகள் எடுத்தால் அடுத்த தேர்தலில் அது தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு முதலீடாகும்.

மற்றொரு கொசுறுத் தகவல், நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட ஆதரவு கொஞ்சம் கொஞ்சமாகச் சரிவு நோக்கி செல்வதை உள்ளூராட்சித் தேர்தல் உணர்த்துவதால் மாகாண சபைத் தேர்தலை எப்படியும் இந்த ஆண்டுக்குள் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்துவது தொடர்பில் ஆளும்தரப்புக்குள் ஆராயப்படுகிறதாம். எனவே அந்தத் தேர்தலையும் கவனத்தில்கொண்டுதான் தமிழ்க் கட்சிகளின் அரசியல் நகர்வுகள் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## நிரூபியுங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி தேர்தலில் வாக்குச் சேகரித்தது போன்று என்பிபி செய்யவில்லை. இன, மத வாதமின்றி நேர்மையாகத் தேர்தலை எதிர்கொண்டது" என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனிடம் கேட்டபோது, "அமைச்சர் நாடாளுமன்றுக்கு வெளியே வந்து இதைச் சொல்லி நிரூபித்துக் காட்டவேண்டும்" என்று சவால் விடுத்தார் சுமந்திரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமைச்சர் விமல் ரட்நாயக்காவுக்கு தெரியவில்லை இலங்கை தமிழ் அரசுக் கட்சி சாத்வீகக் கட்சி மாத்திரமில்லை சமூக அக்கறையுள்ள கட்சியுமாகும் என்று. 75 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றை அமைச்சர் விமல் ரட்நாயக்க எடுத்துப் பார்க்கவேண்டும், எமது கட்சி மது ஒழிப்புக்காக இலக்கைக் கொண்டுள்ளதுடன் அதற்காகப் பல விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

அதனால்தான் மதுபானச் சாலைகளை புதிதாக அமைப்பதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப்பதுடன் நீதிமன்றங்கள் ஊடாக அவற்றைத் தடுக்க நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவான மூன்றாம் நாள் அமைச்சர் விமல் ரட்நாயக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அரசியல் சலுகையாக வழங்கியிருந்த மதுபான அனுமதிப் பத்திரங்களுக்கான சிபார்சினை வழங்கியிருந்த அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிடுவோம் எனத் தெரிவித்திருந்தார், ஆனால் இன்னும் அதனை வெளியிடவில்லை. யார் மீதான பயத்தினால் 6 மாதங்கள் கடந்தும் அதனை அவர் வெளியிடவில்லை?

தேசிய மக்கள் சக்தி மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள வெறுப்பினை சகிக்க முடியாமல் அவர்களது உணர்வுகளை அவமதித்து பிழையான சாட்டுதல்களை அமைச்சர் விமல் ரட்நாயக்க செய்கிறார். அவர் வெளியிட்டுள்ள கருத்து அவரது அரசின் சிறுமைத் தனத்தை வெளிப்படுத்துகிறது.

தமிழ் அரசுக் கட்சி மீதான இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றுக்கு வெளியில் ஆதாரங்களுடன் அமைச்சர் விமல் ரட்நாயக்க வெளிப்படுத்த வேண்டும். அத்தோடு சலுகைகளுக்காகவும் கைமாறுக்காகவும் விலை போனவர்கள் தமிழர்கள் என்று இதுநாள்வரை அவர் கொண்டுள்ள எண்ணம் மிகத்தவறானது - சிறுமையை வெளிப்படுத்துகிறது - என்றார்.

## பூகோள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்புத் தொடக்கத்திலிருந்து பின்பற்றும் நிலைப்பாட்டுக்கமைய இந்து சமுத்திரத்தில் பூகோள மோதல்களில் நாம் தலையிடப் போவதில்லை. எனவே எமது இறையான்மையைப் பாதுகாத்துக் கொண்டு நாம் அணிசேராக் கொள்கைக்கமைய செயற்படுவோம்.

இருப்பினும் எந்தவகையிலும் நாம் பயங்கரவாத செயற்பாடுகளை அனுமதிக்கப் போவதில்லை. அதற்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதுமில்லை. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் எம்மால் முடிந்த ஒத்துழைப்பினை வழங்குவோம். பிராந்தியத்தினதும் மக்களினதும் பாதுகாப்பும், பிராந்தியத்தின் அமைதியுமே எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம். இந்த மோதல் நிலைமையின் எதிர்காலப் போக்கிற்கு அமைய உரிய தீர்மானங்கள் எடுக்கப்படும்.

இந்த மோதல்கள் இந்து சமுத்திர மற்றும் தென்னாசிய அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்பது குறித்து அவதானம் செலுத்தி வருகின்றோம். அதேபோன்று ஏனைய பகுதிகளில் ஏற்பட்டுள்ள போர்கள் எவ்வாறு இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் என்பதும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது. நிதி அமைச்சு, அயலுறவுத்துறை அமைச்சு ஆகியன அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

பிராந்திய அரசுகள் என்ற ரீதியில் இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே எமக்கு உதவிகள் செய்திருக்கின்றன. எதிர்காலத்திலும் உதவிகளை செய்யவுள்ளன. எனவே இவ்விரு நாடுகளுடனும் சிறந்த இராஜதந்திர உறவுகளைப் பேணுவோம். சில பிரச்சினைகள் அவர்களுக்கிடையில் தீர்த்துக்கொள்ள வேண்டியவையாகும். எங்கிருந்து தோற்றம் பெற்றாலும் பயங்கரவாதத்துக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்ப போவதில்லை.

ஒரு நாட்டுக்கு எதிராக எமது நிலப்பரப்பு, நீர்பரப்பு மற்றும் வான் பரப்பினைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாகவுள்ளோம். போர் நிலமைகளைக் குறைத்து பிராந்தியத்தின் அமைதியைப் பாதுகாப்பதற்கும், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதே எமது கடமையாகும் என்றார்.

## 1 பில்லியன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து புதன்கிழமை உலக வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குறைந்த வட்டியுடனான இச்சலுகைக் கடனுதவியானது வலுச்சக்தி, விவசாயம், சுற்றுலா மற்றும் பிராந்திய அபிவிருத்தி என்பன உள்ளடங்கலாக வேலைவாய்ப்பு மற்றும் முதலீடு சார்ந்த உயர் வாய்ப்புக்களையுடைய துறைகளை இலக்காகக்கொண்டு அவற்றின் மேம்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது.

இதனூடாக பொருளாதார வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கும் உள்நாட்டு உற்பத்தித்துறையை வலுப்படுத்துவதற்கும் நீண்டகால வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யக்கூடியவாறான தனியார் முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, "உலக வங்கியின் இந்த நிதியளிப்பு இலங்கை மக்கள் மீதான முதலீடாகும். இந்நிதியுதவி வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கும் சிறிய வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் நாடளாவிய ரீதியில் புதிய வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் பங்களிப்புச்செய்யும். நாம் இந்த உதவியின் ஊடாக சமுதாய மட்டத்தில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

3 வருடகால அடிப்படையில் வலுசக்தி துறைக்கு 185 மில்லியன் டொலர்களும் தனியார்துறை முதலீட்டுக்காக 800 மில்லியன் டொலர்களும் விவசாயத்துறை மேம்பாட்டுக்காக 100 மில்லியன் டொலர்களும் சுற்றுலாத்துறைக்காக 200 மில்லியன் டொலர்களும் பிராந்திய அபிவிருத்திக்காக 200 மில்லியன் டொலர்களும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

## மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நிலையியற் கட்டளை 27/2 கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்புக் கையெழுத்திட்ட சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை மாற்றியமைத்து, தாம் ஆட்சிக்கு வந்த பிறகு புதிய நாணய நிதிய இணக்கப்பாட்டை எட்டுவோம் என தற்போதைய ஆளும்தரப்பு தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. இருந்தபோதிலும் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த தேர்தல் வாக்குறுதியை மீறி முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு கையெழுத்திட்ட அதே நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை பின்தொடர்வதால் நமது நாட்டு மக்கள் தற்போது பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்கமைய ஆளும்தரப்பு தற்போது மின்சார கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மின்சார உற்பத்திச் செலவை அடிப்படையாகக்கொண்டு மின் கட்டணம் திருத்தப்படவேண்டும் என்பதே நாணய நிதியத்தின் நிபந்தனையாகும். அந்த நிலைப்பாட்டில் இருந்தா அரசாங்கம் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்போகிறது எனக் கேட்கிறேன். இந்நிலையில் மின் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அளவும் நாணய நிதியத்தின் மின் உற்பத்தி செலவை அடிப்படையாகக்கொண்ட செலவுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் ஆளும்தரப்வு நாணய நிதியத்தின் மின் உற்பத்தி செலவு தொகையையே ஏற்றுக்கொண்டுள்ளது.

அவ்வாறு மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் அதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பில் ஆளும்தரப்பு மதிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளதா? பூச்சியம் மின் அலகில் இருந்து 90 அலகுவரை எந்தளவு மின் கட்டணம் அதிகரிக்கப்போகிறது?

அதேபோன்று டிஜிட்டல் ஏற்றுமதி சேவைக்கு நூற்றுக்கு 30 வீதம் வரி அறவிடவேண்டும் என நாணய நிதியம் தெரிவித்துள்ளதாகவும் ஆளும்தரப்பு நூற்றுக்கு 15 வீதம் அறவிடப்போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. டிஜிட்டல் ஏற்றுமதி சேவைக்கு வரி அறவிட வேண்டும் என்பது நாணய நிதியத்தின் நிபந்தனையா எனக் கேட்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தை 33 வீதம் குறைப்பதாகக் கூறிய தற்போதைய ஆளும்தரப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கத் தயாராகி வருகிறது. மூத்த பிரஜைகளினதும் சிறுவர்களினதும் சேமிப்புகணக்குகளுக்கான 15 வீத வட்டி வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்த வட்டி வீகிதம் வழங்கப்படுவதில்லை. இவ்வாறு வழங்கப்படாமல் இருப்பது நாணய நிதியத்தின் நிபந்தனையா என கேட்கிறேன் என்றார்.

## ஆட்சியமைக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்புக்குக் காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவில்லை எனக் கூறப்படும் அகலவத்தை பிரதேச சபையில் 20 ஆசனங்களில் 6 உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தியும் 6 உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியும் பெற்றுள்ளன. இருவருக்கும் சபைகளை அமைப்பதற்கான வாய்ப்புள்ளது. இவ்வாறு பல சபைகள் காணப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் போட்டியிட்ட தொகுதியில்கூட தோல்வியடைந்துள்ளனர்.

சஜித் பிரேமதாச 14 சபைகளில் தாம் வெற்றிபெற்றுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவற்றில் ஒன்றில்கூட ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பின்றி அவர்களால் சபைகளை நிறுவ முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி தனித்து வெற்றி பெறவில்லை. ஆனால் ஆளும்தரப்புக்கு 266 சபைகளை மக்கள் வழங்கியிருக்கின்றனர். கொழும்பில் ஆட்சியமைப்பதற்கான அதிகாரம் எமக்கே காணப்படுகிறது.

வடக்கு கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் ஆளும்தரப்புக்கு வழங்கவில்லை. அதிகபட்ச சபைகளை நிறுவுவதே ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பாகும். தமிழ் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மண்முனை தென்எருவில் பற்று பகுதியில் தமிழ் அரசின் ஆதரவுத் தளத்தில் வீழ்ச்சி

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் 11 வட்டாரங்கள் அமைந்துள்ளன. அதில் களுவாஞ்சிகுடி வட்டாரத்திற்கு மாத்திரம் இரண்டு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு 11 வட்டாரங்களிலும் 12 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் களுதாவளை வடக்கு, களுதாவளை தெற்கு, பெரியகல்லாறு, மற்றும் மகிழூர் ஆகிய வட்டாரங்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி படுதோல்வியை அடைந்துள்ளது. ஏனைய வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனினும் மேற்படி வட்டாரங்கள் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோட்டையாக இருந்து வந்துள்ளன.

இது இவ்வாறு இருக்க பெரியகல்லாற்றைப் பிறப்பிடமாக்க கொண்டவர்தான் காலம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கணேசலிங்கம் அதுபோல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களின் ஒருவரான காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா பெரியகல்லாற்றில் பிறந்து கோட்டைக் கல்லாற்றில் திருமணம் செய்து வசித்து வந்தவர். கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த திருமதி க.றஞ்சினி என்பவர்தான் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையில் இறுதியாக உப தவிசாளராக பதவி வகித்து வந்தவர். அதுபோல் கோட்டைக்கல்லாற்றிச் சேர்ந்த மா.நடராசா என்பவர் அக்கட்சியில் கிழக்கு மாகாண சபை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தவர்.

முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இம்முறை பெரியகல்லாறு வட்டாரத்தில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு அந்த வட்டாரத்தை மீண்டும் வென்றுள்ளனார்.

இந்நிலையில் களுதாவளைக் கிராமத்திலிருந்தே அக்கட்சியைச் சேர்ந்த த.கனகசபை என்பவர் பாராளுமன்ற உறுப்பினரான இருந்தவர். பிரதேச சபையின் இறுதி ஆட்சிக்காலத்தில் களுதாவளையைச் சேர்ந்த காலம் சென்ற யோகநாதன் என்பவர்தான் தவிசாளராக பதவி வகித்து வந்தார்.

களுதாவளை வடக்கு வட்டாரத்தில் தேசிய மக்கள் சக்தியும், களுதாவளை தெற்கு வட்டாரத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் வெற்றி பெற்றுள்ளது.

அதுபோல் மகிழூர் வட்டாரமும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அதிகவிருப்புக்குரிய வட்டாரமாக திகழ்ந்து வந்திருந்தது. இந்நிலையில்தான் இவ்வாறு தமிழ் தேசிய பின்புலத்திலுள்ள பாரம்பரிய கிராமங்களும் தமிழ் தேசியத்திலே ஊறிப்போயிருந்த கிராமங்களும் இம்முறை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கையிலிருந்து நளுவிப் போயுள்ளது.

மகிழூர் வட்டாரத்தையும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது.

சரியான வேட்பாளர் தெரிவின்மையும், அக்கட்சியில் ஒரு சிலரின் ஆதிக்கத்தன்மையும், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இடைநடுவில் புகுந்தவர்களின் செயற்பாடுகளே இதற்கு காரணம் எனவும், கட்சி அடிப்படையிலிருந்து மறுசீரமைக்கப்பட வேண்டும் அப்போதுதான் கைநழுவிப்போயுள்ள பாரம்பரியமாக தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற கிராமமக்களை மீண்டும் உள்ளீர்ப்புச் செய்யமுடியும் என தமிழரசுக் கட்சியை நேசிக்கின்ற பலர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இப்பிரதேசத்திற்கு மேலதிகமாகக் கிடைத்திருக்கின்ற ஒரு ஆசனத்தை இளைஞர் ஒருவருக்கு வழங்க வேண்டும் எனவும் இளைஞர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

## மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய அலங்கார உற்சவம்

### இன்று பால்குட பவனி

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய அலங்கார உற்சவ திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மாவின் ஒத்துழைப்புடன் சிறப்பான முறையில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமான இவ் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி சித்ரா பௌர்ணமி அன்று சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும்.

வெள்ளிக்கிழமை பாற்குட பவனி இடம்பெறும்.





## மக்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றுவேன்

### றுஸ்வின் தெரிவிப்பு

(சினீஸ் கான்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மீதும் எம்மீதும் நம்பிக்கை வைத்து, வாக்களித்த அனைத்து உறவுகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக காத்தான்குடி நகர சபை உறுப்பினர் ஈ.எம் றுஸ்வின் தெரிவித்துள்ளார்.

என்னால் முடிந்த பணியை என் மக்களுக்காகக செய்வதோடு, மக்கள் என்மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றுவேன்.

அதேபோன்று, கட்சித்தலைமையோடும் மாவட்டத்தலைமை கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வோடும் இணைந்து காத்தான்குடி நகரத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றுவேன் எனத்தெரிவித்தார்.



மேலும், என் வெற்றிக்கு அயராதுழைத்த போராளிகள், கட்சித்தொண்டர்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், அரச உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்தார்.

## தங்கத் தாரகை பதக்கம் குருளை சாரணர்களுக்கு

(றிபாஸ்).

குருளைச் சாரணர்ளுக்கான உயர் பதக்கமான தங்கத் தாரகை பதக்கம் வழங்கும் விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருளைச்சாரணத் தலைவர்களான துவான் பஸீல், அஸ்மியா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு மாவட்ட சாரண ஆணையாளர் சம்பத் விஜேசிங்க, பாடசாலையின் அதிபர் திருமதி மர்சூக் பிரதம அதிதிகளாகவும் -

உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களான றிஸ்வி, இர்ஸாத், பிர்தௌஸ், தாஹா, ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், சிரேஷ்ட சாரணத் தலைவர்கள், சாரணத் தலைவர்கள், கனிஷ்ட, குருளைச் சாரணர்களின் பெற்றோர்கள் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விழிப்பூட்டும் அழைப்பு

**கொழும்பில் உள்ள பாடசாலையொன்றில் கற்று வந்த ஒரு மாணவி, கடந்த சில நாள்களாக பீடித்த மன அழுத்தம் மற்றும் பள்ளிக்கூட சூழலில் ஏற்பட்ட அழுத்தங்களால், மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி, நாட்டை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. ஒரு மாணவியின் உயிர் இழப்பு என்பது யாராலும் சமாளிக்க முடியாத பேரிழப்பாகும். ஆனால் இதை ஒரு தனிப்பட்ட சம்பவமாக மட்டுமல்லாமல், கல்வி அமைப்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேரூன்றியுள்ள ஒரு பெரும் பிழையாக பார்வையிட வேண்டியது இன்று தேவை.**

**இந்த தற்கொலைக்குச் செயல்பாடுகளில் இருந்த சில பேர்கள் நேரடியாகக் காரணமாக இருக்கலாம் என பரவலாகக் கூறப்படுகிறது. குற்றமுடிவுகள் அதிகாரபூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டியதோடு, மாணவியின் இறப்பிற்குப் பின்னால் இருக்கும் யாரேனும் பொறுப்பாளர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. ஒரு மாணவியின் உயிர் மதிப்பில்லாததல்ல.**

**இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பாலியல் துன்புறுத்தல் தொடர்புபட்டிருப்பதாகவும் செய்திகள் உண்டு. அதற்கெதிராகவும் அதில் சம்பந்தப்பட்டவர் என்று கூறப்படும் ஆசிரியருக்கு எதிராகவும் மக்கள் போராட்டங்களையும் நடத்துகிறார்கள்.**

**இத்தகைய நிகழ்வுகள் பாடசாலைகளில் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றன என்பது மிகவும் கவலையளிக்கிறது. குறிப்பாக பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்கள் பாலியல் ரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. மாணவர்கள் தற்கொலைக்கு பயணிக்கச் செய்யும் அளவிற்கு மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர் என்றால், அந்த வகுப்பறைச் சூழல், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகம் என அனைத்தும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய கட்டாயத்தை உருவாகியுள்ளது.**

**பாடசாலைகள் மாணவர்களுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும் வழங்கும் புனிதமான இடமாக இருக்கவேண்டும். ஆனால் சில இடங்களில் மாணவர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் அத்துமீறல்கள், முறைகேடுகள், மன அழுத்தம் தரும் ஒழுங்குபடுத்தல், பாகுபாடு, ஆகியவை இன்னும் பட்டியலிடப்படாத உள்ளடக்கமாகவே உள்ளன. இவை மாணவர்களது மனநிலை மீது கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இதில் கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விடயம் மாணவிகள் மீதான பாலியல் முறைகேடுகள் மட்டுமே கவனத்தில்கொள்ளப்படுவதுடன் மாணவர்கள் மீதான முறைகேடுகள் சமூகத்தாலும் கல்விச் சூழலாலும் புறக்கணிக்கப்படும் நிலமை தொடர்வதையும் அவதானிக்க முடிகிறது.**

**இதற்கெதிராக பள்ளித் திறன்கள் மட்டுமின்றி மனநல, சமூகநல விழிப்புணர்வு அதிகரிக்கப்படவேண்டும். பாடத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொடர்ந்து பாலியல் வன்முறை, தொழில்முறை ஒழுக்கம், மாணவர்களின் உணர்வியல் பாதுகாப்பு ஆகியவைகளில் விழிப்புணர்வு ஊட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.**

**அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது விசாரணை செயல்முறைக்கு. இந்த மாணவியின் இறப்புக்கான விசாரணை முழுமையாக, நேர்மையாக, ஊழலின்றி நடைபெற வேண்டும். குற்றவாளிகள் யார் என்பதை மையமாகக் கொண்டிருக்கும் இது போலச் சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாத வகையில் பாடசாலைகளுக்குள் உள்ள ஒவ்வொரு கூறும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.**

**ஒரு மாணவியின் உயிர் கடந்துபோன பின்னரே நாம் விழித்துக்கொள்கிறோம் என்றால், அது இந்த கல்வி அமைப்புக்கு பெரிய தோல்வியாகும். இனிமேலும் ஒரு மாணவனோ மாணவியோ தற்கொலைக்கு முனையாத நாளை உருவாக்கும் வகையில் சட்டம், கல்வி, மற்றும் சமூக விழிப்புணர்வு ஒருங்கிணைந்த முயற்சியாக முன்னேற்றப்பட வேண்டும்.**


Gajendrakumar Ponnambalam


M.A. Sumanthiran

# கிடைக்குமா, புதிய விடை?

**என். சத்தியமூர்த்தி**

*ஒரு திரைபடத்தில் வடிவேலு கூறுவார்: "நான் தேமேன்னு தானே இருந்தேன். என்னை உசுப்பேற்றி, உசுப்பேற்றி, இந்த நிலைக்கு கொண்டு தள்ளி விட்டுட்டீங்களே..."*

*செவ்வாய்கிழமை நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல்களில் வடக்கு மாகாணத்தில், அதிலும் குறிப்பாக யாழ்பாணத் தேர்தல் மாவட்டம் மற்றும் நகர பகுதியில், தமிழ் அரசு கட்சி பெற்ற வெற்றி செய்தியைத் தமிழ் பத்திரிகை உலகம் வெளியிடும் அழகைப் பார்த்தால், இந்தப் பகடி வசனம்தான் நினைவிற்கு வருகிறது.*

*கடந்த நாடாளுமன்ற தேர்தலை வைத்து நோக்கும்போது, தமிழ் அரசு பெரிய வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக, வாக்கு எண்ணிக்கையிலும் ஆசன எண்ணிக்கையிலும், ஆளும் ஜேவிபி - -என்பிபி கூட்டணியை இரண்டாம் இடத்திற்கு தள்ளிவிட்டது. அதேசமயம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கூட்டணி யாழ்பாணம் நகர சபை உள்ளிட்ட குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. இதுவே, பிற தமிழ் அணிகளுக்கும் வேறுபட்ட அளவுகளில் பொருந்தும்.*

*இந்தத் தேர்தல் முடிவுகளை வைத்து, தமிழர் பகுதிகளில் தமிழ் அரசு மீண்டும் இழந்த செல்வாக்கு முழுவதையும் பெற்றுவிட்டது என்று கருதி செயல்படுவதும், தலையங்கங்கள் எழுதுவதும் நகைப்பிற்குரியது. இல்லையென்று சொல்லாமல், அனைத்துத் தமிழ் தரப்பினரும் ஒரு சேர நின்றிருந்தால், ஆளும் தரப்பு காணாமலே போயிருக்கும் என்ற உண்மையை மறந்துவிடக்கூடாது.*

*இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட உள்ளாட்சி தேர்தல்களில் அப்போது உயிரோட்டமாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பு கட்சிகள் தனித்துப் போட்டியிட்டால், தற்போதைய விகிதாசார தேர்தல் அமைப்பின்படி, அவர்கள் அனைவருமாகச் சேர்ந்து அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் பெரும்பான்மை பெறும் வாய்ப்பு உள்ளது என்று சுமந்திரன் அன்று கூறியது என்னவோ உண்மை. அதுவே தற்போது நிஜமாகி இருக்கிறது என்பதும் உண்மை. ஆனால், இதற்கு அப்பாலும் உறங்காத சில உண்மைகள் உள்ளன. அது கால-நேரம் அனுசரித்து தாமாகவே அரங்கேறும் உண்மைகள்.*

*அந்த விதத்தில், நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்மாங்குட்ட நடந்த ஆளும் தரப்பினரை, தமிழ் அணியினர் ஒரு கூட்டாக சந்தித்திருந்தால், மொத்த வாக்கு சதவீத அடிப்படையில் அவர்களுக்கான ஆசனங்கள் கணிசமாக குறைந்திருக்கும்.*

*நிச்சயமாக, தற்போதும், வட மாகாணத்தில், இரண்டாவது பெரிய கட்சியாக அவர்கள் உருவெடுத்திருக்க முடியாது. என்ன, அவர்கள்தான் இரண்டாவது கட்சி. ஆனால், பெரிய கட்சியாக இருந்திருக்க மாட்டார்கள்.*

*அந்த இலக்கை நிலைபடுத்திக் கொண்ட பின்னர் கூட, தமிழர் தலைமைகள் மீண்டும் பிரிந்திருந்தால், தற்போதைய விவாதங்களுக்கு இடமிருந்திருக்காது. ஆனால், தமிழர் வாக்குகளை தங்களுக்குள் பிய்த்துக் கொண்டதன் மூலம், ஜேவிபி அணியினருக்கு தமிழ் தலைமைகள் மாகாண சபை தேர்தலில் இன்னுமொரு ரவுண்ட் வருவதற்கு வாய்ப்பையும் எதிர்பார்ப்பையும் கொடுத்திருக்கின்றனர்.*

### வட்டத்திற்கு வெளியே

*தற்போதைய தமிழ் அரசின் வெற்றி, சுமந்திரன் என்ற தனி மனிதனின் வெற்றியாகவும் பார்க்கப்படுகிறது. உண்மையை சொல்லப்போனால், முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, தமிழ் அரசை நம்பி, பல்வேறு தமிழ் சமூகத்தினரும் வாக்களித்துள்ளனர் என்ற கருத்தும் பரவலாக இருக்கிறது. இதுவே, தமிழ் காங்கிரஸ் மற்றும், ஏன், ஆளும் கூட்டணிக்கும் பொருந்தும்.*

*அதாவது, குறிப்பாக தமிழ் அரசுக் கட்சியை ஒரு குறிப்பிட்ட சமூக- சமுதாய வட்டத்திற்குள் நிறுத்தி வைத்து அரசியல் செய்யும் முறைமை மாறி உள்ளது. அந்த விதத்தில், அனைத்து தமிழ் தரப்புகளுமே, பல்வேறு சமூக- சமுதாய உறுப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இந்த தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. இது வரவேற்கப்படவேண்டிய மாற்றம்.*

*இந்தப் பின்னணியில், தமிழர் தலைமைகள் குறிப்பாக வட மாகாண சபை தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், அவர்கள் தனித்துப் போட்டியிடுவதால் பயனேற்படாது. இன்னும் சொல்லப்போனால், தேர்தலுக்குப் பின்னாலான சூழ்நிலையை மனதில் நிறுத்தி,*

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# கிடைக்குமா..........

4ம் பக்கத் தொடர்ச்சி...........

அவர்கள் எவ்வளவு நாள்தான், ஒருவரை ஒருவர் தாக்கி பேசமால் உப்புசப்பற்ற தேர்தல் பரப்புரை செய்ய முடியும்?

கடந்த காலங்களுக்கும் தற்போதைய நிலமைகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். முன்பு, கஜேந்திரகுமார் மட்டுமே சமஷ்டித் தீர்வில் உறுதியாக இருந்தார். மற்றவர்கள் அனைவரும் பதிமூன்றாவது தீர்வுத் திட்டம் முழுமையாக செயல்படுத்தவேண்டும் என்பஷ்திலேயே குறியாக இருந்தனர். அவர்கள் இந்திய தலைமையை தொடர்ந்து அணுகி வந்ததும் இதனால்தான்.

அண்மைகட காலமாக, தமிழ் அரசு உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் சமஷ்டி முறைமைக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அவ்வாறென்றால், அடிப்படைக் கொள்கை ரீதியாக முக்கிய தமிழ் தரப்புகள் எவருக்குமே வேறுபாடுகள் இல்லை. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் தேர்தல் அரசியலில், அனைத்துத் தமிழ் தரப்பினரும் ஒரே கொள்கையை முன்னிறுத்தி அரசியல் செய்வார்களேயானால், தங்களுக்குள் போட்டி என்றாகும்போது, எதனைச் சொல்லி தமிழ் மக்களின் வாக்குகளைக் கோருவார்கள்?

எதிரில் நிற்கும் தமிழ் தலைமைகளையும் அவற்றின் தலைவர்களை நேரடியாக தாக்குவதன் மூலமும்தான் அவர்கள் பரப்புரை செய்யமுடியும்.

இவ்வாறு ஒருவரை ஒருவர் தேர்தல் காலத்தில் தாக்கிப் பேசிய கட்சித்தலைமைகளால், தேர்தலுக்குப் பின்னர் எவ்வாறு ஒரே அணியில் இருந்து அரசில் செயலாற்ற முடியும்? அவர்கள் மற்றவரைத் தாக்கி பேசிய ஒவ்வொரு விடயத்திலும் அரச விசாரணை தேவையாகும் பட்சத்தில், அதுவே தமிழ் சமூகத்தின் எதிர்காலத்தைப் பாதிக்காதா?

## மமதை, மனபிராந்தி

உண்மையைக் கூறவேண்டுமானால், கீழ் மட்டங்களில், அனைத்துத் தமிழ் தரப்புகளும் ஒரு சேர நின்றுபல உள்ளாட்சி அமைப்புகளிலும் அதிகாரத்தைக் கைபற்றினாலும், அவர்கள் தலைமைத்துவங்கள் தங்கள் மனபிராந்திகளையும், மமதையையும் விட்டு ஒழித்தால் மட்டுமே. அவர்களுக்கிடையேயான 'கெமிஸஸ்டிரி' சரியாக 'ஒர்க்-அவுட்' ஆகும். அது நிகழ்ந்தால் மட்டுமே அனைத்து மட்டங்களிலும் ஒற்றுமை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

தற்போது, தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் அணிகளை எடுத்துக்கொள்வோம். தமிழ் அரசு கட்சிக்குள், சுமந்திரன்- - சிறீதரன் உள்குத்துகள் உள்ளாட்சி தேர்தல்களுக்காக ஒத்திப்போடப் பட்டனவே தவிர, அவை முழுவதுமாக ஒய்ந்து விடவில்லை. தமிழ் காங்கிரஸ் கூட்டணியில் புதிதாக சேர்ந்த அணியினரில் பலரும், சுமந்திரனை சுட்டிக்காட்டிவிட்டு தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வெளியேறியவர்கள்.

உண்மையிலேயே. சுமந்திரன்மற்றும்கஜேந்திரகுமார் ஆகிய இருவரும் தங்கள் இருவருக்கிடையேயான மோதல் போக்கை விட்டுவிட்டு, ஓர் அணியில் கை கோர்க்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அந்தக் கட்சிகள் மற்றும் அணிகளின் இரண்டாம் கட்ட தலைவர்களின் நிலைமை என்னாவது? அவர்களை குறித்துப் பேச்சு எழாததற்கு காரணம், கஜன்- - சுமந்திரன் இடையேயான பஞ்சாயத்தே இன்னமும் தொடங்காததுதான்.

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா, என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால், அந்த மீசை கூட முளைக்காத நிலைமையை எவ்வாறு அழைப்பது? தற்போதைய தமிழர் பிரச்சினையே, உள்ளாட்சி தேர்தலை தொடர்ந்து, அந்த அமைப்புகளில், தமிழ் அணிகளிடையே விட்டுக்கொடுக்கும் மனப்போக்கோட்டு அதிகாரத்தை கைப்பற்றினால், அதனைஎப்படி தக்கவைத்துக்கொள்வது என்பதுதான்.

முன்பு யாழ்பாண மாநகர சபை மேயர் பதவி மற்றும் வேறு சில உள்ளாட்சி அமைப்புகளில், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு, அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி கட்சி நிபந்தனையற்ற ஆதரவு அளித்தது. அவ்வப்போது, ஈபிடிபி, அதிகாரத்தில் இருந்தவர்களை அசைத்துப் பார்த்தாலும், கூட்டமைப்பின் உள்வீட்டு உள்குத்துகளே, சபைநிகழ்வுகளை கேலிக்கூத்தாக்கியது என்பதே உண்மை.

## அதி முக்கிய முன்னெடுப்பு

தற்போதைய சூழ்நிலையில், அரச தலைமை தனது எதிர்கட்சி தலைவர்களை 'உள்ளே' அனுப்புவதன் மூலம் அவர்களை 'வீக்' ஆக்கலாம் என்று எண்ணிச் செயல்படுகிறது. தென்னிலங்கை தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, அரச தரப்பு இதே அணுகுமுறையை தொடருமேயானால், முந்தைய ஆட்சியாளர்களின்ட 'பார்' பெர்மிட் விவகாரம் மீண்டும் உயிர்த்தெழலாம். இதன் மூலம் தமிழ் அரசு கட்சியின் தலைவர்- தேர்வு சிறீதரனையும் இலஞ்ச ஒழிப்பு துறை குறி வைக்கலாம் என்ற அளவில் சில பத்திரிகைகள் மீண்டும் கோடிட்டுக் காட்டத் தொடங்கி உள்ளன.

இந்தப் பின்னணியில், தமிழர் தரப்பினரின் அதி முக்கிய முன்னெடுப்பு, அனைத்துத் தரப்பினரையும் ஓரணியில் திரட்டுவதை ஒட்டியே இருக்கவேண்டும். என்ன, ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் சிவாஜிலிங்கம் போன்ற காய்ந்த சருகுகள் இன்னமும் தங்களை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களாகவே கருதி வருகின்றனர். அதன் காரணமாகவும் தமிழ் அரசியல் மேடை அவசியமில்லாமல் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இந்த நிலைமையும் மாறவேண்டும்.

அதனால், தற்போதைய கேள்வி ஒன்றே ஒன்றுதான் பூனைக்கு அல்லது ஆற்றல் மிக்க பூனைகளுக்கு (மட்டும்) யார் மணி கட்டுவது? அதுவும் அதி முக்கியமான மாகாண சபை தேர்தலுக்கு முன்னால். அல்லது, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், அனைத்துத் தமிழ் தலைவர்களையும் சந்தித்துப் பேசிய கஜேந்திரகுமார் இந்த முறையும் அந்த முயற்சிக்கு வித்திடுவாரா? அவ்வாறென்றால், கடந்த முறைபோல் அல்லாது, அவர் சுமந்திரனையும் சந்திக்க முயற்சி செய்வாரா?

இவைதான் இன்று தமிழர் தலைமைகள் முன்னால் இருக்கும் கேள்விகள். இந்தக் கேள்விகளும் முன்னால் எழுப்பபட்டவைதான். ஆனால் அவற்றிற்கான விடை மட்டும் புதிதாக இருக்கவேண்டும். இல்லையென்றால், தமிழ் வாக்களார்கள் மீண்டும் முருங்கை மரம் ஏறினால், அவர்களை யாரும் குறை சொல்லக் கூடாது.



# காத்தான்குடி நகர சபை மு.காங்கிரஸ் வேட்பாளர்களுடன் கலந்துரையாடல்

(சினீஸ் கான்)



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் கட்சி, ஐக்கிய தேசிய கூட்டமைப்புமற்றும்சுயேற்சை குழுக்களில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் அவர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, காத்தான்குடி நகரசபையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள்தொடர்பானமுக்கியவிடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

காத்தான்குடி நகர சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து வட்டாரங்களையும் வெற்றிகொண்டு பத்து ஆசனங்களையும் இலங்கை தொழிலாளர் கட்சி ஓர் ஆசனத்தை பட்டியல் மூலம் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.



# விழிப்புணர்வு கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகவனிதையர் பிணியாய்வு நிலைய விழிப்புணர்வு கருத்தரங்கு, கர்ப்பிணி தாய்மார்களுக்கான பிரசவத்திற்கு முன்னரான பராமரிப்பு தொடர்பான கர்ப்பகால அமர்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஷகீலா இஸ்ஸதீன் அவர்களின் ஆலோசனைக்கமைவாக இடம்பெற்ற இவ் விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடல் நேற்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே மதன் அவர்களின் தலைமையில் சாய்ந்தமருது ஏ.பி.சிட நிலையத்தில் நடைபெற்றது.

அத்துடன் இதில் கலந்து கொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் உடல் நிறை குறியீட்டெண், இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் பொதுச் சுகாதார தாதிய சகோதரி, பொது சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் 35,45 வயதுக்கு உட்பட்ட தாய்மார்கள் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




# திருக்கோவில் பிரதேச சபை சுயேச்சை முன்னிலையில்

(சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபைத் தேர்தலில் சுயேச்சைக்குழு ஒன்று அணித் தலைவர் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சை குழு வரலாறு காணாத வெற்றியை பதிவு செய்துள்ளது.

மொத்தம் 10 வட்டாரங்களில் 08 வட்டாரங்களில் சுயேச்சை குழு அமோக வெற்றியை ஈட்டி உள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக திருக்கோவில் பிரதேச சபை சுயேச்சை அணி வசமாகிறது.

திருக்கோவில் பிரதேச சபையில் சுயேட்சை அணி ஒன்று 08 ஆசனங்களையும் ,இலங்கை தமிழரசுக் கட்சி 06 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி மற்றும் சுயேச்சை அணி தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.

16 ஆசனங்களில் 50 வீதமான 08 ஆசனங்களை சசிகுமார் தலைமையிலான சுயேச்சை அணி பெற்றுள்ளது.

எனவே ,அங்கு சுயேச்சை அணித் தலைவரான பிரபல தொழிலதிபரும், கல்முனை ரோட்டரி கழக முன்னாள் தலைவருமான சுந்தரலிங்கம் சசிகுமார் தவிசாளராக தெரிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வட்டாரங்களில் பெற்ற வாக்குகள் விவரம்
சுயேட்சை குழு 01 ( வண்டில் ) - 7829 வாக்குகள் 08 ஆசனங்கள்
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 5666 வாக்குகள் 06 ஆசனங்கள்
தேசிய மக்கள் சக்தி - 1068 வாக்குகள் - 01 ஆசனம்
சுயேட்சை குழு 02 ( பந்து ) - 504 வாக்குகள் 01 ஆசனம்
வட்டாரம் - 01 - தம்பட்டை, தம்பிலுவில்
சுயேச்சை குழு ( வண்டில் ) - 753
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 621
வட்டாரம் - 02 - தம்பிலுவில் மேற்கு
இலங்கைத் தமிழரசுக் கட்சி 680
சுயேட்சை குழு ( வண்டில் ) - 600
வட்டாரம் - 03 - தம்பிலுவில் கிழக்கு
சுயேச்சை குழு ( வண்டில் ) - 690
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 452
வட்டாரம் - 04 - தம்பிலுவில் மேற்கு
சுயேச்சை குழு ( வண்டில் ) - 587
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 168
வட்டாரம் - 05 திருக்கோவில் மேற்கு
சுயேட்சை குழு ( வண்டில் ) - 1588
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 1234
வட்டாரம் - 06 திருக்கோவில் கிழக்கு
சுயேட்சை குழு ( வண்டில் ) - 994
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 440
வட்டாரம் - 07 விநாயகபுரம் வடக்கு
சுயேட்சை குழு ( வண்டில் ) - 768
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 699
வட்டாரம் - 08 விநாயகபுரம் கிழக்கு
சுயேட்சை குழு ( வண்டில் ) - 528
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 471
வட்டாரம் - 09 விநாயகபுரம் மேற்கு
சுயேட்சை குழு ( வண்டில் ) - 1005
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 573
வட்டாரம் - 10 - தாண்டியடி
இலங்கைத் தமிழரசுக் கட்சி - 328
சுயேச்சை குழு ( வண்டில் ) - 31

# கடும் காற்றுடன் கூடிய மழையால் மரம் வீழ்ந்து வீட்டுக்குச் சேதம்



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவின் நடுப்பிரப்பந் திடல் பகுதியில் வீடொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் சேதம் ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

நேற்று மாலை பெய்த கன மழையுடன் கூடிய காற்றினால் குறித்த மரம் வீட்டின் மீது விழுந்ததில் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் வீட்டு உபகரணங்கள் உட்பட பல பொருள்களும் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் வீட்டு கூரையுடனான கட்டடம் பகுதியளவில் உடைந்து வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# வடக்கு கிழக்கில் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக்கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம்

## என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் வடக்கு கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ளனர்.எதிர் வரும் காலங்களில் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வில்லை என்றால் மக்கள் வழங்கிய ஆணையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற செய்தியை சொல்லியுள்ளனர்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லாத நிலையில் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜே.வி.பி.அரசாங்கத்திற்கு கூடுதலாக மக்களின் ஆதரவு கிடைக்க பெற்றுள்ளமை அனைவரும் அறிந்த விடயம்.எனினும் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் ஜே.வி.பி.பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது.

தமிழர்களை தமிழர்கள் ஆழக்கூடிய வகையில் தமது ஆணையை வழங்கி உள்ளனர். மேலும் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்கின்ற செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினை பொறுத்த வகையில் அடுத்தடுத்து வருகின்ற தேர்தலாக இருக்கலாம்,போராட்டங்களாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அடிப்படையில் செயற்படக்கூடிய ஒரு முயற்சியை நாம் முன்னெடுக்கின்றோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப் போம்.நாங்கள் தமிழரசு கட்சியுடனும்,கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியுடனும் நாங்கள் பேசிக்கொண்டு இருக்கின்றோம்.

எங்களுடைய முதல் ஆட்சி அமைக்கின்ற செயல்பாடுகள் தமிழ் தேசிய கட்சிகளுடன் இருக்கும்.அதனடிப்படையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம்.நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்குகளை வழங்கி உள்ளனர். மக்களின் ஆணையை உணர்ந்தவர்களாக நாங்கள் செயல்பட வேண்டும். - என்றார்.

# காரைதீவில் முஸ்லிம் காங்கிரஸிற்கு கிடைத்த போனஸ் ஆசனத்தை மாவடிப்பள்ளிக்கு தருக

## ஆதரவாளர்கள் கோரிக்கை

(சகா தேவராஜா)

காரைதீவு பிரதேச சபைக்கு தெரிவாகியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போனஸ் ஆசனத்தை மாவடிப்பள்ளிக்கு வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

நடைபெற்று முடிந்த காரைதீவு பிரதேச உள்ளாட்சி தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் மாளிகைக்காடு மேற்கு வட்டாரத்தை வென்றது. அதில் பிரதான வேட்பாளர் எம் எச் எம்.இஸ்மாயில் தெரிவு செய்யப்பட்டார் .

பிரதேசமொத்தவாக்கு அடிப்படையில் போனஸ் ஆசனமொன்று கிடைத்தது.

முஸ்லிம் காங்கிரஸுக்கு மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் 444 வாக்குகளும் மாவடிப்பள்ளியில் 569 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

அந்த அடிப்படையில் இந்த ஆசனம் மாவடிப் பள்ளிக்கு வழங்கப்பட வேண்டும். அது மாவடிப்பள்ளி முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எம் என் எம்.றனீஷுக்கு வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாளிகைக்காடு கிராமத்திற்கு ஏலவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மக்கள் சக்தி மற்றும் சுயேச்சை என்று மூன்று ஆசனங்கள் கிடைத்துள்ளன.

ஆனால், மாவடி ப்பள்ளிக்கு ஒரே ஓர் ஆசனமே கிடைக்கப்பெற்றது.

எனவே மாவடிப்பள்ளிக்கே அந்த ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது .

மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் 479 வாக்குகளை பெற்று சுயேச்சை அணித்தலைவர் யாகிர் போனஸ் ஆசனத்தைப் பெற்றுள்ளார்.

எனவே அங்கு மு.காவிற்கு கிடைக்கப்பெற்ற 444 என்ற வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

ஆகவே போனஸ் ஆசனத்திற்கு காரைதீவு பிரதேச சபையில் இருந்து ஓர் ஆசனம் தெரிவாக காரணமானது. மாவடிப் பள்ளியில் கிடைக்கப்பெற்ற 569 வாக்குகள் என்பதை உலக அறியும் .

எனவே முகா தலைமைகள் இதனை உணர்ந்து இந்த ஆசனத்தை மாடவடிப்பள்ளி றனீஸ்க்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

# பாணந்துறையில் உயிரிழந்து கரை ஒதுங்கியது திமிங்கிலம்



பாணந்துறை கடற்கரையில் வியாழக்கிழமைகாலை உயிரிழந்த நிலையில் திமிங்கிலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

18 அடி நீளமுடைய திமிங்கிலம் ஒன்றே இவ்வாறு உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

இதனை கண்ட மீனவர்கள் சிலர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பின்னர் பொலிஸார் இது தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இந்த திமிங்கிலம் நீண்ட நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

# தீவகத்தில் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கின்றது சிவபூமி

## ஆறு. திருமுருகன் தகவல்

நொத்தாரிசு சுப்பிரமணியம் இல்லம் சிவ பூமி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டுள்ளதன் மூலம் சிவபூமி அறக்கட்டளையானது வேலணையில் தமது பணியினை ஆற்றவுள்ளது என அதன் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

வேலணை வங்களாவடி வீதியில் அமைந்துள்ள அமரர் நொத்தாரிசு சுப்பிரமணியம் இல்லத்தை அவரது நினைவாக அவரது குடும்பத்தவர்கள் சிவபூமி அறக்கட்டளைக்கு தர்மசாதனமாக வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் சிவ பூமி அறக்கட்டளை தீவகம் தமது பணியை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார்.



## வெளிநாடுகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றஅடிப்படையில் சுமார் ஒரு பில்லியன் ரூபா வரை அரச நிதி செலவிடப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு பிரதிநிதிகள் குழு 19 அரசமுறைப் பயணங்களை மேற்கொண்டுள்ளது. இதற்கு 1027 மில்லியன் ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளது என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குங்கள். பணவீக்கம் மற்றும் வட்டி வீதம் என்பன கடந்த ஆளும்தரப்பின் காலத்திலேயே குறைவடைந்தன. ஆகவே உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள். பொய்யுரைக்காதீர்கள் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவியாழக்கிழமை நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 'அ' அட்டவணையின் ஒழுங்குவிதிகளின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரம் பலமடைந்துள்ளதாகவும் பணவீக்கம் மற்றும் வட்டி விகிதம் குறைவடைந்துள்ளதாகவும் மக்கள் சுகபோகமாக வாழ்கிறார்கள் என்றும் நிதிப் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும குறிப்பிட்டார். 2025ஆம் ஆண்டுபொருளாதார வளர்ச்சி 5 சதவீதத்தால் உயர்வடையும் என்று கடந்த ஆண்டு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது பொருளாதார வளர்ச்சி 3 சதவீதமாக வரையறுக்கப்படும் என்று குறிப்பிடப்படுகிறது. பொருளாதாரப் பலப்படுத்தலை உறுதிப்படுத்தாவிடின் ஆளும்தரப்பு என்பதொன்று இருப்பதில் பயனில்லை.

சமூகக்கட்டமைப்பில்ஏழ்மை33சதவீதமாக உயர்வடைந்துள்ளது. பொருளாதாரம் வளர்ச்சியடையாவிடின்எவ்வாறுபுதியதொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வது, பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொண்டிருந்தால் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு பொருளாதாரம் வளர்ச்சிப் பெற்றிருக்க வேண்டுமே? பொருளாதார வளர்ச்சி 3 சதவீதம் என்று இலக்கிடப்பட்டால் ஆளும்தரப்புத் தனது பொருளாதார கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும்.

பொருளாதார வளர்ச்சி நோக்கிச் செல்வதாயின் எந்த வகையிலான பொருளாதாரக்கொள்கையைசெயற்படுத்த வேண்டும் என்பது ஆளும்தரப்புக்குத் தெரியாது. இதுதான் அடிப்படைப் பிரச்சினையாகும்.

பொருளாதாரம் தொடர்பில் நாட்டுக்கு பொரும் வாக்குறுதிகளை வழங்கினீர்கள். 2028 ஆம் ஆண்டு இலங்கையை அபிவிருத்தியடையும் நாடு என்ற நிலைக்கு கொண்டு செல்ல வேண்டுமாயின் பொருளாதார வளர்ச்சி 7 முதல் 8 சதவீதத்தால் உயர்வடையவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். அவரது இந்த கூற்றுக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி அவரைப் பார்த்துச் சிரித்தீர்கள்.

ஆனால், இப்போது பொருளாதார வளர்ச்சியை 3 முதல் 3.1 சதவீதத்துக்கு வரையறுப்பதாக குறிப்பிடுவதற்கு ஆளும்தரப்பின் 159 உறுப்பினர்களுக்கும் வெட்கமில்லையா? ஆளும்தரப்புப் பதிலளிக்கவேண்டும்.

பொருளாதார பலப்படுத்தப்பட்டதற்கான பெருமையை கடந்த ஆளும்தரப்புக்கு வழங்குங்கள். பணவீக்கம் மற்றும் வட்டி வீதம் கடந்த ஆளும்தரப்பின் காலத்திலேயே குறைவடைந்தது. ஆகவே உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள். பொய்யுரைக்காதீர்கள்.

பொருளாதாரம் குறித்து எவ்விதமான தெளிவும் இல்லாத காரணத்தால் சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்துப் பரிந்துரைகளுக்கும் ஆளும்தரப்பு இணக்கம் தெரிவிக்கிறது. இதற்கமைவாகவே மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபொய்என்று முடிந்தால் குறிப்பிடுங்கள். இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளைக் கருத்திற் கொள்ளாமல் சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானங்களை ஆளும்தரப்பு முழுமையாக ஏற்கிறது. இந்த நாட்டுக்கு







ஆரம்பநாள் நிகழ்வு அழைப்பிதழ்
NEITHAL ECO PARK
நெய்தல் சூழல்நேயப் பூங்கா
காலம்: 09 மே 2025
நேரம்: மாலை 04.30
Location Map
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
மண்டைதீவு, யாழ்ப்பாணம்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி கிளிநொச்சியில் வளங்கள்!

கிளிநொச்சிகணகபுரம்பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி நேற்று வழங்கப்பட்டது.



# வடக்கு முழுவதும் என்.பி.பிக்கு பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது

## இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயம் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்

தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்தி மீது வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை. மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். அரசியல் இருப்புக்காகவே தேசிய மக்கள்சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாக சில குழுக்கள் போலி பிரசாரம் முன்னெடுத்துவருகின்றன. - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

பொதுத்தேர்தலென்பது வேறு, உள்ளூராட்சிசபைத் தேர்தலென்பது வேறு, எனவே, உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளுடன்தான், உள்ளூராட்சிசபைத் தேர்தலை முடிவை ஒப்பிட வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 தேர்தலில் வடக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில்தான் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால் இம்முறை வடக்கில் எல்லா பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயமாகும்.

எனினும், மக்களை பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல் வாதிகளுக்கு இது பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர் என போலிப் பிரசாரம் முன்னெடுத்து இன்பம் காண்கின்றனர்.

ஜனாதிபதி தோழர் அநுரகுமார திஸாநாயக்க மீதும், எம்மீதும், எமது அரசாங்கம்மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால்தான் நிச்சயம் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். நிச்சயம் அதனை செய்வோம். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டுவருகின்றது.

எனவே, சதிகார அரசியல்வாதிகளால் எம்மையும், மக்களையும் பிரிக்க முடியாது. இலக்கை நோக்கிய எமது பயணம் தொடரும். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாழ்ப்பாணம்உட்பட வடக்குமாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அத்தனை சொந்தங்களுக்கும் நன்றிகள்;. அதேபோல வாக்களிக்காதவர்களுக்கும் எமது சேவைகள் தொடரும்.- என்றார்.

# மாணவர்களுக்கு எச்.பி.வி. தடுப்பூசி





தரம் 6 மற்றும் 7 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எச்.பி.வி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் சாய்ந்தமருது கல்முனை லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம் பெற்றது.

இதன்போது 1 தொடக்கம் 5 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்குமருத்துவபரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் அப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கு தொற்றா நோய் தடுப்பு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்பாடானது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றதுடன் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது, பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கு கிழக்கு மலையகத்தில் சிறுபான்மை தலைவர்கள் ஒன்றிணைவது அவசியமாம்

## முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் கூறுகிறார்

(ஹஸ்பர்)

சிறுபான்மை கட்சி தலைவர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் ஒன்றிணைவதன் மூலம் யார் என்பதை இந்த அரசுக்கு எடுத்துக் காட்டலாம் என முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று (வியாழக்கிழமை) மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடார்ந்தும் கருத்து தெரிவிக்கும் போது -

நடந்த முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தல் இந்த நாட்டினுடைய சிறுபான்மை சமூகம் அல்லது பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறுபான்மை தலைவர்கள் இந்த நாட்டினுடைய சகல மக்களினதும் அங்கீகாரம் பெற்ற தேசிய மக்கள் சக்தி முதலான கட்சிகளின் தலைவர்களுக்கும் பல உண்மைகளை மக்கள் வழங்கியிருக்கிறார்கள் தேசிய மக்கள் சக்தியின் , ஜே.வி.பி உடைய செயலாளர் ரில்வின் சில்வா அவர்களும் நாட்டினுடைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் அவர்களுடைய அமைச்சர்களும் இந்த தேர்தலை மாபெரும் வெற்றியாக வெளிக்கொணர்கின்ற போதும் கூட நடந்து முடிந்த பொதுத் தேர்தலை விட 20 லட்சத்துக்கும் குறைவான வாக்குகளை பெற்றுள்ளார்கள். தங்களுடைய நிலைப்பாட்டில் இருந்து மாற வேண்டும் என்பதை முஸ்லீம் சமூகம் சொல்லுகின்ற உரிமைகளை கதைக்கின்ற போது இனவாதம் மதவாதம் என்று கூறுவதை விட்டு விட்டு

அதே போன்று வடபுலம் தமிழ் மக்கள் கைகளிலே இல்லை அது தேசிய மக்கள் சக்தியிடமிருந்து அதிகாரத்தை பெற்றுக்கொள்வோம் என்று சொல்வதை விட அந்த பிரதேசத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தமிழரசு கட்சிக்கும் விக்னேஸ்வரன் தலைமையில் இருந்த ஜனநாயக முண்ணனிக்கும் கஜேந்திர குமாருடைய இலங்கை தமிழ் காங்கிரஸூக்கும் அங்கு மாபெரும் அங்கீகாரத்தை வழங்கியிருப்பது மட்டுமன்றி




கிழக்கு மாகாணத்தின் சிவநேசதுறை சந்திரகாந்தன் அவர்களுக்கும் 37 இக்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் ஒரு சபையை வழங்கியிருப்பதில் இருந்து ஈபிடிபி கூட அங்கு தீவுப் பகுதியில் அவர்களுக்கான அங்கீகாரம் கிடைத்திருக்கின்ற நேரத்தில்

தமிழ் தலைவர்கள் அணைவரும் ஒன்று சேர்ந்து தனித்து மாபெரும் சக்தியாக ஒன்றிணைவதன் மூலம் தமது பலத்தை நிரூபித்து காட்டலாம்.

வடக்கு கிழக்கு மலையகத்தை சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஒன்றிணைவதன் மூலம் இதனை செய்யலாம்.

முஸ்லீம் கட்சி தலைவர்களான அகில மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தேசிய காங்கிரசின் தலைவர் அதாவுல்லா ஒன்றிணைந்து மாபெரும் சக்தியை வெளிக்காட்டுவதன் மூலம் சரியான பலத்தை காட்டிக் கொள்ள முடியும்.

தலைவர்கள் மாற வேண்டும் அதே போல ஒன்றுபட வேண்டும் என்ற செய்தியை தங்கள் கருத்திற் கொண்டு வருகின்ற இரண்டாம் திகதிக்கு முன்னர் இவர்கள் யார் என்பதை மக்களுக்கு சொல்ல வேண்டும் என்பதே எனது கருத்தாகும். - என்றார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# காரைதீவு பிரதேச சபையில் தமிழ் அரசு முன்னிலையில்

## முன்னாள் தவிசாளர்கள் இருவர், உப தவிசாளர் ஒருவர், உறுப்பினர்கள் இருவர் தெரிவு

(சகாதேவராஜா)

நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபைக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நான்கு வட்டாரங்களை வென்று முன்னணியில் உள்ளது.

இக் கட்சியின் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மீண்டும் தவிசாளராகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

07 வட்டாரங்களுள்ள காரைதீவில் 11 உறுப்பினர்கள் தெரிவாகி இருக்கின்றார்கள்.

இங்கு இலங்கை தமிழரசுக் கட்சி நான்கு ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் 02 ஆசனங்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சுயேச்சை குழு ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.

தெரிவான பிரதான வேட்பாளர்களுள் இருவர் முன்னாள் தவிசாளர்கள், ஒருவர் முன்னாள் உப தவிசாளர் ,இருவர் முன்னாள் உறுப்பினர்களாவர்.

முன்னாள் தவிசாளர்களான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், யோகரெத்தினம் கோபிகாந்த் ஆகியோரும் முன்னாள் உபதவிசாளர் ஏ.எம்.ஜாகீர் உறுப்பினர்களான எம்எச்எம்.இஸ்மாயில், சுபாஸ்கரன் ஆகியோர் தெரிவாகி இருக்கின்றார்கள்.

வட்டாரம் 3 இல்

இலங்கைதமிழரசுக்கட்சி. 786 வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடியுள்ளது.

அதன்படி அவ்வட்டாரத்துக்கான இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதான வேட்பாளர் ஆசிரியர் சுப்பிரமணியம் பாஸ்கரன் ( முன்னாள் உறுப்பினர்) உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வட்டாரம் 4 இல்

இலங்கைதமிழரசுக்கட்சி. 981 வாக்குகளை பெற்று வெற்றி வாகை சூடியுள்ளது.

அதன்படி அவ்வட்டாரத்துக்கான இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதான வேட்பாளர் பட்டதாரி ஆசிரியர் வை.கோபிகாந்( முன்னாள் தவிசாளர்) உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

வட்டாரம் 6 இல்

இலங்கைதமிழரசுக்கட்சி. 812 வாக்குகளை பெற்று வெற்றி வாகை சூடியுள்ளது.

அதன்படி அவ்வட்டாரத்துக்கான இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதான வேட்பாளர் மாவடி கந்தசாமி ஆலய செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வட்டாரம் 7 இல்

இலங்கை தமிழரசுக் கட்சி. 1101 வாக்குகளை பெற்று வெற்றி வாகை சூடியுள்ளது.

அதன்படி அவ்வட்டாரத்துக்கான இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதான வேட்பாளர் பிரபல சமூக செயற்பாட்டாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்( முன்னாள் தவிசாளர்) உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதன் படி காரைதீவு பிரதேச சபையில் உள்ள ஏழு வட்டாரங்களில் நான்கு வட்டாரங்களில் இலங்கை தமிழரசுக் கட்சி அமோக வெற்றி ஈட்டியுள்ளது.

மீதி மூன்று வட்டாரங்களில் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் தேசிய மக்கள் சக்தி பர்ஹான் மாளிகைக்காடு மேற்கு வட்டாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இஸ்மாயில் மாவடிப்பள்ளி வட்டாரத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஹில்மி ஆகியோர் தெரிவாகி இருக்கிறார்கள்.

ஏனைய நால்வரும் போனஸ் பட்டியலில் தெரிவாகி உள்ளனர்.

இதில் பெண் வேட்பாளர்கள் யாரும் தெரிவாகவில்லை. எனவே பெரும்பாலும் தேசிய மக்கள் சக்தியின் போனஸ் பட்டியலில் இப் பெண் உறுப்பினர் தெரிவாக லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சபையில் ஒரு தொங்கு உறுப்பினருடன் 12 உறுப்பினர்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு. கிண்ணியடியில் மீன் வளர்ப்பு திட்ட போர்வையில் மண் அகழ்வு

## மக்கள் ஆர்ப்பாட்டம்: இருவர் கைது

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிண்ணியடி பகுதியில், மீன் வளர்ப்பு திட்டம் என்ற பெயரில் மண் அகழ்வை மேற்கொள்வதை எதிர்த்து, அப்பகுதி மக்கள் நேற்று (வியாழக்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தனியார் காணியில் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மீன் வளர்ப்பு திட்டத்தின் கீழ், பாரிய அளவில் குழிகள் தோண்டப்பட்டு, அகழப்பட்ட மண் வெளியே கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து அப்பகுதி இளைஞர்கள் கடந்த காலங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதையடுத்து திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை மீண்டும் மண் அகழ்வை ஆரம்பித்ததை எதிர்த்து கிராம மட்ட அமைப்புக்கள் மீண்டும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

நேற்று காலை 10.00 மணியளவில், அப்பகுதி மக்கள் ஒன்று கூடி, அகழப்பட்ட மண்ணை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களை வீதியில் வழிமறித்து, 'எங்கள் மண் வளத்தை அழிக்காதே', 'சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது' எனும் சுலோகங்களுடன், திட்டத்தை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில்தான், தமிழரசு கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளரும், மற்றொரு இளைஞரும் பொலிஸாருடன் பேச்சுக்கு சென்றபோது, இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதனால் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. தொடர்ந்து மக்கள், கைது செய்யப்பட்ட இருவரையும் விடுதலை செய்யக் கோரி போராட்டத்தைத் தொடர்ந்தனர். பின்னர், பொலிஸார் இருவருக்கும் எதிராக வழக்கு பதிந்து பிணையில் விடுவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில், மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில், பிரதேச செயலாளர், நில அளவை திணைக்களம், சுரங்கப் பணியகம் , மாவட்ட நன்னீர் மீன் வளர்ப்பு அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





இதன் முடிவாக, அடுத்த மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் வரை மண் அகழ்வை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், பிரதேச மக்கள் அங்கு கொட்டகை அமைத்து அமர்ந்து, தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 'பொலிஸாரின் அடாவடிக்கு எதிராகவும், சுற்றுச்சூழல் அழிவை தடுக்கவும் இந்த போராட்டம் வெற்றிகரமாக நிறைவடைய வேண்டும்' என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2025இல் வெளியிடப்பெற்றது